# மலக்குழி மரணங்களில் நாட்டிலேயே 2 ஆவது இடத்தில் தமிழ்நாடு: பொது விசாரணை நிகழ்ச்சியில் தகவல்

By DIN | Published on : 29th July 2023 | 12:34 AM




மலக்குழி மரணங்களில் நாட்டிலேயே இரண்டாமிடத்தில் தமிழ்நாடு இருப்பதாக. கோளவாயில் இளைஞர்களுக்கான சமூக விழிப்புணர்வு மையம் சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொது விசாரணை நிகழ்ச்சியில் தெரிவிக்கப்பட்டது.

தமிழகத்தில் கழிவு நீர்த் தொட்டிகள், கழிவு நீர்க் கால்வாய்கள், மலக்குழிகளில் விஷவாயு தாக்கி உயிரிழந்த சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கேட்கும் விதமாக, அது தொடர்பாக தொடர்ந்து இயங்கி வரும் இளைஞர்களுக்கான சமூக விழிப்புணர்வு மையம் சார்பில் பொது விசாரணை நிகழ்ச்சி நடைபெற்றது.

சமூக விழிப்புணர்வு மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் க.பழனிசாமி வரவேற்றார். செயல் இயக்குநர் வே.அ.ரமேசுநாதன் நோக்க உரையாற்றினார். ஆதித்தமிழர் பேரவையின் தலைவர் இரா.அதியமான் தொடக்க உரையாற்றினார்.

மக்கள் கண்காணிப்பகத்தின் இயக்குநர் ஹென்றிடிபேன், அரசு சிறப்பு வழக்குரைஞர் ப.பா.மோகன், கவின்மலர், பொன்னுசாமி, செம்மலர் ஆகியோர் நடுவர் குழுவில் இடம்பெற்றிருந்தனர். இதில், பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்திருந்த பாதிக்கப்பட்ட மக்கள் தங்களது புகார்களை முன் வைத்தனர்.

ரமேசுநாதன் பேசும்போது, மலக்குழி மரணங்களில் நாட்டிலேயே இரண்டாமிடத்தில் தமிழ்நாடு உள்ளது. கடந்த 30 ஆண்டுகளில் மட்டும் தமிழ்நாட்டில் 250-க்கும் மேற்பட்ட மரணங்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் மனிதக் கழிவுகளை நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த 43 பேர் உயிரிழந்துள்ளனர். இது தொடர்பான 34 புகார்களில் 25 வழக்குகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதிலும், 12 வழக்குகள் மட்டும்தான் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பாக 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வது காலதாமதமாகியுள்ளது. இதனால் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இதுவரை தண்டிக்கப்படவில்லை என்றார்.

இதையடுத்து நிகழ்ச்சியில் பங்கேற்ற பாதிக்கப்பட்டவர்கள் பேசும்போது, தங்கள் குடும்பங்களில் வருவாய் ஈட்டக் கூடிய நிலையில் இருந்த ஆண்கள், மலக்குழியில் சிக்கி மரணமடைந்துள்ள நிலையில், அரசின் உதவித் தொகை இதுவரை கிடைக்கவில்லை என்று குற்றஞ்சாட்டினர்.

இதையடுத்து பாதிக்கப்பட்ட மக்கள், சட்ட ரீதியாகவும், நிவாரணத்துக்காகவும் அடுத்த கட்டமாக என்ன மாதிரியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற ஆலோசனைகளை நடுவர் குழுவினர் வழங்கினர்.

வழக்குரைஞர் ப.பா.மோகன் பேசும்போது, மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றுவதற்கு தடை, மறுவாழ்வுக்கான சட்டம் 2013 ஆம் ஆண்டே கொண்டுவரப்பட்டது என்றாலும், மலக்குழி மரணங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

பொது விசாரணையைத் தொடர்ந்து அனைத்து வழக்குகளின் தற்போதைய நிலை குறித்த அறிக்கையை தொகுத்து உடனடியாக அரசுக்கு வழங்க இருக்கிறோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் கிடைக்கவும், சட்டரீதியான நடவடிக்கையை துரிதப்படுத்தவும் பரிந்துரைக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

https://www.dinamani.com/all-editions/edition-coimbatore/coimbatore/2023/jul/29/tamil-nadu-ranks-2nd-in-country-in-malachite-deaths-information-in-public-inquiry-programme-4045555.html